**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 369/2022

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18–ம் நாள் வெள்ளிக் கிழமை DW1–ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.10.2024 | தந்தை பெயர்: | |
| பெயர்: | பழனிவேல் (DW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணம் தாக்கல் செய்கிறேன்.

1) பட்டுசாமி பெயரில் உள்ள வீட்டு மனை பட்ட அசல் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.
2) முதல் பிரதிவாதியின் கணவர் பட்டு சாமியின் இறப்பு சான்றின் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.
3) முதல் பிரதிவாதி மற்றும் பட்டுசாமிக்கு பிறந்த குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் (2 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ. 3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.
4) பட்டு சாமியின் வாரிசு சான்றிதழ் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ. 4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.
5) பட்டுசாமி பெயரில் உள்ள கணிணிகூட்டு பட்டா பி.வா.சா.ஆ. 5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**